நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 15.07.2020

**சாத்தூர் நகர்மன்ற அவசரக் கூட்டம்**

**நிகழும் மங்களகரமான ஆண்டு சார்வரி வருடம் ஆனி மாதம் 31 ஆம் நாள் 2020ம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசரக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்: 1

சாத்தூர் நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்ட பணியினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.200.00 இலட்சம் நிதி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020–2021–ன் கீழ் ஒதுக்கீடு செய்து தர கோரி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டது.

| வ. எண் | வார்டு எண் | பணியின்விபரம் | நீளம் (கீ.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1,3,5,6,7, 12, 19&20 | சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.1 பெரியார்நகர் மெயின்ரோடு, வார்டு எண்.19 மாரியம்மன் கோவில் தெரு வார்டு எண்.20 முருகன் கோவில் தெரு வார்டு எண்.5&10 பழைய படந்தால் ரோடு வார்டு எண்.3 அன்பு இல்லம் காம்பளக்ஸ் ரோடுகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலைகள் மற்றும் வார்டு எண்.6, இராஜாகோபால் மண்டபம் தெரு,வார்டு எண்.7 நடராஜா தியோட்டர் குறுக்கு தெரு வார்டு எண்.3 ஓரிஜினல் கிணற்று தெரு, கார்த்திகேயன் பைனான்ஸ் தெரு, நியூகாலனி மற்றும் எல்.ஐ.சி. ஆபிஸ் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலைகள் அமைத்தல் | 2.680 | 6.00, 5.00 3.80, 3,00 | ரூ.200.00 |

நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.17349/2019/இ3 நாள்: 14.07.2020–ல் மேற்படி பணிகளை கீழ் காணும் நிதி ஆதார அமைப்பில் (Funding Pattern) மேற்கொள்ள TURIP 2020–2021–க்கான திட்ட அனுமதி வழங்கும் குழு அனுமதி அளித்துள்ளதாகவும், இதற்க்கு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள நகர மன்ற அனுமதி பெற்று நிர்வாக அனுமதிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட மானியநிதி (ரூ இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| சாத்தூர் | ரூ.200.00 | ரூ.150.00 | ரூ.50.00 |

எனவே மேற்காணும் நிதி ஆதார அடிப்படையில் சாலை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 252/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 645, நாள்: 15.07.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**